## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு 11 – 2017

## அரசியலமைப்புச் சட்டம் 11

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

**குறைந்தது ஒரு (01)** வினாவையாவது **பகுதி** 11இலிருந்து தேர்ந்தெடுத்து எல்லாமாக **நான்கு (04)** வினாக்களுக்கு **மட்டும்** விடை எழுதுக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

### பகுதி 1

1. "மத்திக்கும் புறப்பகுதிக்கும் இடையில் அதிகாரப் பகிர்வைச் செய்யும் மாதிரிகள் பல்வேறு உள்ளன. ஆயினும், இத்தகைய வேறுபட்ட மாதிரிகளின் அடிப்படையாக விருக்கும் அரசியலமைப்புச்சார் மற்றும் சட்டஞ்சார் நெறிகளானவை அரசுகளை 'கூட்டாட்சி', 'மருவிய-கூட்டாட்சி', 'ஒற்றையாட்சி', இன்னோரன்ன வேறுபட்ட நாமங்களால் அழைக்க வைக்கின்றன. ஏதேனும் ஜனநாயக அரசாங்க மாதிரியைத் தேர்வு செய்வதென்பது மக்களின் அரசியல் முதிர்ச்சியிலும் பன்மைச் சமூகத்தில் சமரசமாகச் செயற்படவுள்ள விருப்பத்திலும் தங்கியிருக்கும்."

   மேற்படி கூற்றின் பின்னணியில், அரசிலுள்ள இரண்டு அதிகாரப் பகிர்வு மாதிரிகளது அடிப்படையான அரசியலமைப்புச்சார் நெறிகளின் நன்மை தீமைகளை விமர்சித்து ஆராய்வதுடன் அந்த நெறிகளை வேறுபடுத்திக் காட்டுக.

2. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலத்தின் மீதான உயர்நீதிமன்றத்தின் 'பெரும்பான்மை' அபிப்பிராயத்தையும் அதற்கு 'முரண்பாடு' அபிப்பிராயங்களையும் மதிப்பீடு செய்வதற்கு மூன்று தசாப்தங்களின் பின்னர் நேரமானது கனிந்துள்ளது.

   இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையைப் அடிப்படையாகக் கொண்டுசெய்யப்பட்ட 'பெரும்பான்மைத்' தீர்ப்பின் வாதங்களையும் மற்றைய நீதிபதிகளால் தெரிவிக்கப்பட்ட 'முரண்பாடு' கருத்துக்களையும் விமர்சித்து ஆராய்க. மாகாணசபை முறைமையின் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை அரசியலமைப்புச் சீர்திருத்தம் மீதான அண்மைக்கால விமர்சனங்களின் உதாரணங்களைக் காட்டி உமது விடையை மேலும் ஆதாரப்படுத்துக.

கூறுகின்றார்.

மாகாண முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையானது, திரு. றே தனது பணிகளைப் புரிகின்ற வேளையில் அமைச்சரவையின் 'உதவியை மற்றும் ஆலோசனையைப்' பெறுவதில்லை என்பதைக் அவதானிக்கின்றது. இந்த நிலையில், மாகாணசபையானது ஆளுநரைப் பதவி அகற்றுமாறு ஆலோசனை வழங்கும் பிரேரணை ஒன்றை உரியமுறையில் நிவேற்றி அதனைக் கோரிக்கையாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கின்றது. இதற்கிடையில், சபையைக் கலைக்க விரும்பும் திரு. றே முதலமைச்சருடன் கலந்துரையாட அவர் சபை கலைக்கப்படுவதற்குத் தனது மறுப்பை வெளிப்படுத்துகிறார். அமைச்சரவையானது சபையின் செல்வாக்கைத் தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றது. இருந்தபோதும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியபின் திரு. றே சபையைக் கலைக்கின்றார்.

ஆளுநரது செயல்களின் அரசியலமைப்புச்சார் வலிதாந்தன்மையையும் ஏற்புடைமையையும், அரசியலமைப்பின் இயைபான ஏற்பாடுகளுடனும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடனும் தொடர்புபடுத்தி, விமர்சித்தாராய்க.

4. மாகாணசபையின் சட்டவாக்கற் தத்துவமானது 'மாகாண வீடமைப்பு மற்றும் நிருமாணம்' பற்றி மூன்று உப சரத்துக்களில் விரிவாகத் தரப்பட்டுள்ள விடயம் மீது நியதிச்சட்டத்தை ஆக்குவதையும் உள்ளடக்குகிறது. மாகாணசபைகளுள் ஒன்று 'மாகாண வீடமைப்பு மற்றும் நிருமாண அதிகாரசபை நியதிச்சட்டம்' எனும் நியதிச்சட்ட வரைவைத் தற்போது தயார் செய்வதில் ஈடுபடுகிறது. 1979இல் நிறைவேற்றப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என்ற பாராளுமன்றச் சட்டமொன்று ஏற்கனவே உள்ளது. தேசிய வீடமைப்பு மற்றும் நிருமாணத்துக்கான மத்திய அமைச்சரானவர் 'தேசிய வீடமைப்பு மற்றும் நிருமாணக் கொள்கை' என்ற கொள்கை ஆவணமொன்றை 2016 ஒக்டோபரில் வெளியிடுகின்றார்.

2016இல் மத்திய அமைச்சரால் வெளியிடப்பட்ட தேசிய வீடமைப்பு மற்றும் நிருமாணக் கொள்கை, மற்றும் 1979இல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் சிலவற்றுடன் ஒவ்வாததாகவிருக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கிய நியதிச்சட்டமொன்றை மாகாணசபை உருவாக்குவதற்குச் சபைக்குள்ள நியதிச்சட்டமாக்கும் அதிகாரம்பற்றி மாகாண வீடமைப்பு மற்றும் நிருமாணத்துறைக்கான மாகாண அமைச்சர் உம்முடன் கலந்தாலோசிக்கின்றார்.

தொடர்ச்சி -3-

மாகாணசபையின் சட்டவாக்க அதிகாரத்தின் பரப்பளவையும் அதனைப் பிரயோகிப்பதில் அது கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறையையும் எடுத்துக் கூறுகின்ற சட்டத்தை ஆய்வுசெய்கின்ற அபிப்பிராயம் ஒன்றை எழுதுக. உமது அபிப்பிராயமானது இயைபான அரசியலமைப்பு ஏற்பாடுகளை மதிப்பிடல் வேண்டும்.

5. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் நீதிமுறைத் தத்துவம் எவ்வாறு அனுகப்பட்டிருக்கின்றது பற்றி விபரமான நிலவரக் குறிப்பொன்றைத் தயாரிக்குமாறு மாகாணசபைகள் அமைச்சு உம்மை கோருகிறது. மாகாணசபை முறைமையின் கீழ் மக்களின் நீதிமுறைசார் தத்துவமானது எத்துணையளவு, அவ்வாறு இருப்பின், பேரளிக்கப்பட்டிருக்கின்ற தென்பதை விமர்சித்து ஆராயுமாறும் அமைச்சு விரும்புகிறது.

அமைச்சுக்காக, இயைபான அரசியலமைட்பு மற்றும் சட்ட ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புபடுத்தி, விபரமான நிலவரக் குறிப்பொன்றைத் தயாரிக்குக.

## பகுதி 11

(இந்தப் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு** வினாவுக்காவது விடை தருக.)

6. அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறி குழுவின் அறிக்கையானது உள்ளூர் அரசாங்க முறைமையானது எந்த அடிப்படை சட்ட நெறிகளில் தங்கியிருக்க வேண்டுமென்பதை மீளக் கூறுவதுடன் மாத்திரமன்றி அத்தகைய முறைமையினால் முகங்கொடுக்கப்படும் நடைமுறைச் சவால்களையும் விவரமாகக் கூறுகின்றது. முகங்கொடுக்கப்படும் சவால்களை வெற்றிகொள்வதற்கு உள்ளூர் அரசாங்க முறைமைக்கு உதவிசெய்கின்ற புதியதொரு கட்டமைப்பு வடிவத்தையும் அந்த அறிக்கை முன்வைக்கிறது.

மேற்படி கூற்றின் பின்னணியில் இலங்கையிலுள்ள உள்ளூரதிகார சபைகளின் சட்ட இயல்பையும் கட்டமைப்பையும் மற்றும் மாகாண நிருவாகத்துடனும் மத்திய அரசாங்கத்துடனும் அவை கொண்டுள்ள உறவுமுறையையும் மதிப்பிடுக. உள்ளூர் மட்டத்தில் மக்களின் இறைமை உண்மையாக அனுபவிக்கப்படுவதற்கு வழிவகுக்குமென நீர் கருதும் சிபார்சுகளை முன்வைக்க.

7. "இலங்கையிலுள்ள உள்ளூரதிகார சபைகளால் நிறைவேற்றப்படும் உப-விதிகளின் வலிதாந்தன்மையானது நீதிமுறை ஆய்வுக்கு உட்பட்டதாகும். இந்த உப-விதிகளின் வலிதாந்தன்மையை நீதிமன்றங்கள் பரீட்சிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏதுக்கள் பல உள்ளன."

உப-விதிகளின் வலிதாந்தன்மையைக் கேள்விக்குட்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நீதிமுறை பரீட்சைகளைத், தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி, ஆராய்க.